# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 12190/SCIC/2024**

திரு V. கோபால் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பொதுஅதிகார அமைப்பு
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **31.05.2024** |
| 2, | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 05.09.2024 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.07.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.09.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 31.05.2024 தேதியிட்ட மனுவில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் காயரம்பேடு ஊராட்சி கண்ணன் நகர், குக்கிராமம், திருவள்ளூர் தெருவில் வரிவிதிப்பு எண்.4098-க்கு எந்த ஆவணத்தின்

அடிப்படையில் வீட்டு வரி இணையதளத்தில் பதியப்பட்டது என்பது போன்ற தகவல்களை 9 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி ஷாகின் நிஷா, உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், காட்டாங்கொளத்தூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்றைய விசாரணைக்கு ஆஜரான அலுவலர் 13.07.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதில் திரு அ. துரைவேலு, பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், காட்டாங்கொளத்தூர் என்பவர் நீதிமன்ற வழக்கு தொடர்பாக தான் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு செல்லவிருப்பதால் இன்றைய (13.07.2026) விசாரணைக்கு ஆணையத்தில் ஆஜராவதற்கு 2 மணி நேரம் காலஅவகாசம் வழங்குமாறு கோரியிருந்தார். அதனைத்தொடர்ந்து இன்று (13.07.2026) பொதுத் தகவல் அலுவலர் சார்பில் விசாரணைக்கு ஆஜரான அலுவலர் பிற்பகல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு அவர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுவிட்டதாகவும், மனுதாரரும் அத்தகவல்களைப் பெற்றுக்கொண்டு, மனநிறைவு கடிதம் அளித்துள்ளதாகத் தெரிவித்து, அக்கடித நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதனை ஆணையம் ஏற்கிறது. மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. **எனவே, இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 12190/SCIC/2024**</u>

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காட்டாங்கொளத்தூர்
செங்கல்பட்டு மாவட்டம்.

**மனுதாரர்**
திரு V. கோபால்,
த/பெ வேலாயுதம்,
எண்.506, திருவள்ளுவர் சாலை,
காயரம்பேடு கிராமம்,
காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

TK/PS